வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 83 /2020

வழக்கு சாட்சி LW2/ PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காமராஜ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | முருகப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 63 |

தேதி 20.08.2025

எதிரி ஆஜர் இல்லை.

சாட்சி மனு அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் எனது மனைவிக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு மச்சான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்துத் தொடர்பாக வழக்கு சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னை எதிரிகள் அடித்தார்கள் என்ற விவரத்தினை நான் முதல் தகவல் அறிக்கையிலும், போலீஸ் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் சரளா குளிக்கும் போது தவறாக எதிரிகள் படம் எடுத்தனை போலீஸ் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது மகளும் போலீஸ் விசாரணையில் தன்னை தவறாக படம் எடுத்தனை கூறவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். . நான் முதல் தகவல் அறிக்கையிலும், போலீஸ் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்துப்பிரச்சனைக் காரணமாக எதிரிகள் மீது நாங்கள் பழிவாங்கும் நோக்கத்தோடுக் கொடுத்த பொய்யான புகார் மீது பதிவுச் செய்யப்பட்ட பொய்யான வழக்கு இது என்றால் சரியல்ல. பழனி, சுந்தரம், பத்மா, சுமதி, வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து நான் பொய்யான புகார் அளித்து அதில் பதிவுச் செய்யப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.